# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
முறையீட்டு மனு எண்: 428/2016/

ஆணை எண் 246/2017/நாள் 10.10.2017

டாக்டர் திரு. டி. சுபின், BHMS,
த/பெ. திரு. தங்கநாடார்,
5/68 H மிடாலக்காடு,
பாலப்பள்ளம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பாலபள்ளம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். -- எதிர் மனுதாரர்

ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், பாலப்பள்ளம் பேரூராட்சி தொடர்பான முறையீட்டுதாரரின் புகார் மனு பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் ந.க.எண். 15529/2013/இ.2/நாள் 10.05.2016உடன் இணைக்கப்பட்டு 17.05.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி மனுவில் பாலப்பள்ளம் பேரூராட்சியில் வேலை செய்யப்பட்ட சாலைகளை திரும்ப திரும்ப செய்ததாக குறிப்பிட்டு மோசடி/கையாடல் செய்யப்படுவதாகவும் , பாலப்பள்ளம் பேரூராட்சியின் மூன்றாவது வார்டில் ராயப்பன் வீடு முதல் தங்கப்பன் வீடு வரை தார்தளம் அமைத்து பக்க சுவர் கட்டப்பட்டுள்ளதாக ரூ 4.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது என்றும் பக்கச்சுவர் எதுவும் 16.06.2013 வரை கட்டப்படவில்லை என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பு எண் 428/2016/பே/நாள் 20.05.2016ன்படி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை, மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015ன் விதி 6 ல் நிர்ணயிக்கப்பட்டவாறு முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில் ரூ 10/– மதிப்பிலான நீதிமன்ற கட்டண வில்லையுடன் தாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு அறிவிப்பாணை அனுப்பப்பட்டது.

ஆயினும் மனுதாரர் விதிகளின்படி உரிய படிவத்திலும் நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடனும் முறையீட்டு மனுவினை தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரருக்கு வாய்ப்பு அளித்திடும் வகையில் 12.01.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி உரிய விளக்கங்களை அளிக்குமாறு தெரிவித்து, அழைப்பாணை இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 428/2016/பே/நாள் 30.11.2016 ன்படி அனுப்பப்பட்டது.

அவ்வாறு வாய்ப்பளிக்கப்பட்ட நிலையிலும் மனுதாரர், மேற்படி விசாரணை நாளன்று ஆஜராக தவறியுள்ளார். இதனிடையே இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 428/2016/பே/நாள் 30.11.2016ன் படி மேற்படி புகார்கள் தொடர்பான அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு பாலப்பள்ளம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கை ந.க.எண். 225/2016/அ.1/நாள் 11.1.2017ல் அறிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்படி அறிக்கையில் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பணி 2009–2010ல் பொது நிதி திட்டத்தில் ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, முடிவு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான செலவினத் தொகை ரூ 3,75,468/– 02.07.2010ல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆவணங்களின் நகல் அறிக்கையுடன் இணைக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்படி அறிக்கை மற்றும் ஆவணங்களை பரிசீலித்ததில் மேற்படி பணி 2009–2010 தொடர்பானதாகவும், 02.07.2010ல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

மனுதாரர் விதிகளின்படி தனது முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில் தாக்கல் செய்ய தவறியதுடன், நேரடி விசாரணைக்கும் ஆஜராக தவறியுள்ளார். எனவே முறையீட்டு மனுதாரருக்கு கூறிக் கொள்ள முகாந்திரம் ஏதும் இல்லை எனக் கருதப்படுகிறது. மேலும் 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (C) ன்படி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்று ஐந்த ஆண்டு காலக்கெடு முடிவடைந்துவிட்டதால் இம்முறைமன்ற நடுவர் அமைப்பின் விசாரணைக்கு உகந்ததல்ல எனக் கருதி மேற்படி முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது

2017ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திவின்படி– அனுப்பப்படுகிறது//–

செயலாளர் 10x17

பெறுநர்

1. டாக்டர் திரு. டி. சுபின், BHMS,
   த/பெ. திரு. தங்கநாடார்,
   5/68 H மிடாலக்காடு,
   பாலப்பள்ளம் அஞ்சல்,
   கன்னியாகுமரி மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   பாலப்பள்ளம் பேரூராட்சி,
   கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை.
2. பேரூராட்சிகளின் ஆணையர்,
   குறளகம், சென்னை